بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *24/01/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## குர்ஸ் பின் ஜாபிர் போர் நடவடிக்கை மற்றும் ஸீ கரத் போர் ஆகியவற்றின் பின்னணியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾
اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ۬ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

**பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த போர் நடவடிக்கைகளின் குறிப்பு கூறப்பட்டு கொண்டிருந்தது. இன்று அது தொடர்பாக முதலில், குர்ஸ் பின் ஜாபிர்** (كرز بن جابر) **அவர்களின் போர் நடவடிக்கை பற்றி கூறுவேன்.** இந்தப் போர் நடவடிக்கை ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷவ்வால் மாதம் உரானியீனை நோக்கி செய்யப்பட்டது. சிலரைப் பொருத்தவரை இந்த போர் நடவடிக்கை சயீத் பின் ஸய்து அவர்களுடையதாக இருந்தது. ஆனால் அநேக மக்களுடைய கூற்று என்னவென்றால், இந்த போர் நடவடிக்கை குர்ஸ் பின் ஜாபிர் அவர்களுடையதாக இருந்தது. இந்த போர் நடவடிக்கை ஜரீர் பின் அப்துல்லாஹ் அவர்களுடையதாக இருந்தது என்றும் ஒரு கூற்று உள்ளது. ஆனால் இந்த கூற்று மறுக்கவும் பட்டுள்ளது.

**இந்த போர் நடவடிக்கைக்கான விபரம் என்னவென்றால்,** உக்ல் மற்றும் உரைனா குலத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அவர்கள் நோயுற்றும் இருந்தார்கள். எங்களுக்கு அடைக்கலம் கொடுங்கள்; எங்களுக்கு உணவு கொடுங்கள் என்றார்கள். அவர்கள் நபவி பள்ளிவாசலின் முற்றத்தில் தங்கியிருந்தார்கள். அவர்கள் விரைவிலேயே உடல் ஆரோக்கியம் பெற்றார்கள். ஆனால், மதீனாவின் தட்பவெட்ப நிலை அவர்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்களின் அனுமதி மற்றும் கட்டளையுடன் ஒட்டகங்களின் மேச்சல் பகுதிகளுக்கு அவர்கள் சென்று விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லையற்ற பரிவுடன் இவ்வாறு நடந்து கொண்ட போதிலும் அம்மக்கள் மேய்ச்சல் பகுதியில் இருந்த போது காஃபிராகி விட்டார்கள். ஒட்டகங்களை தம்முடன் ஒட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். உடல் நலம் தேறிய பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை ஏமாற்றி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமையான யஸார் மற்றும் அவருடைய சில தோழர்கள் அம்மக்களை விரட்டிச் சென்ற போது அவர்கள் முஸ்லிம்களுடன் போரிட்டார்கள். மிகவும் இரக்கமற்ற முறையில் யஸாருடைய கை கால்களை வெட்டி, நாவிலும் கண்களிலும் முட்களை குத்தி வைத்து அவரை ஷஹீத் ஆக்கினார்கள். பிறகு அவர்கள் ஒட்டக இடையர்களை நோக்கி சென்றார்கள். அவர்கள் அனைவரையும் கொன்றார்கள். அவர்களிடமிருந்து தப்பித்த ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, தம் தோழர்களை கொலை செய்து விட்டு ஒட்டகங்களை ஓட்டிச் சென்றுவிட்டார்கள் என்று தகவல் கூறினார்.

அன்னாருக்கு இந்தச் செய்தி கிடைத்தபோது, அவர்களைப் பிடித்து வருவதற்காக அவர்களுக்கு பின்னால் 20 நபர்களைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் துஆவினால் அந்த நாளிலேயோ அல்லது அடுத்த நாளிலேயோ அவர்கள் பிடிக்கப்பட்டு அன்னாருடைய சமூகத்தில் கொண்டு வரப்பட்டார்கள். பல்வேறு அறிவிப்புகளில் இருந்து தெரிவதென்னவென்றால், அம்மக்கள் முஸ்லிம் இடையர்களோடு

எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதேபோன்று பெருமானார் (ஸல்) அவர்களும் அம்மக்களுடன் நடந்து கொண்டார்கள். ஆனால் அப்போது வரை சடலங்களை சிதைப்பதை விட்டு தடுக்கக் கூடிய இஸ்லாமிய போதனை இறங்கியிருக்கவில்லை. பிறகு அக்கட்டளை இறங்கியபிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் எந்தவொரு படைப்பிரிவை அனுப்பி வைத்தாலும் சடலங்களை சிதைக்கக் கூடாது என்று தடை செய்து வந்தார்கள். சதக்கா கொடுக்குமாறு போதித்து வந்தார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** முஸ்லிம்களுக்கு அந்த நாள் மிகவும் அபாயகரமானதாக இருந்தது. ஏனென்றால் குரைஷியர்கள் மற்றும் யூதர்களின் தூண்டுதலின் காரணமாக முஸ்லிம்களுக்கு எதிராக முழு நாட்டிலும் பகைமையின் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. (எதிரிகள்) தங்களுடைய புதிய செயல் திட்டத்தின் அடிப்படையில், மதீனா மீது முறையாக தாக்குதல் நடத்துவதற்கு பகரமாக மறைவான வழிமுறைகளினால் முஸ்லிம்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்கள்.

**அந்த அநியாயக்காரர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இந்த விவகாரத்தில் அநீதிக்கான ஆரம்பம் காஃபிர்கள் சார்பாகவே செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அந்த தீர்ப்பும்கூட மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்திற்கு ஏற்பவே வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறிருந்தும், இஸ்லாம் அந்தக் கட்டளையை மேலும் தொடரவில்லை. பின்வரும் காலத்திற்காக அதை தடை செய்து விட்டது...... சில மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் - அவர்களுள் (சர் வில்லியம்) முயர் சாஹிபும் அடங்குவார் - இச்சம்பவம் பற்றி எடுத்துரைக்கும் போது வழக்கம்போல் ஆட்சேபனை செய்திருக்கிறார்கள். ஆனால் முழு சூழ்நிலையையும் முன்னால் வைத்து சிந்தித்துப் பார்க்கும்போது இந்த விஷயத்தில் இஸ்லாம் முற்றிலும் தூயதாக இருப்பது தெரிய வருகின்றது. ஏனென்றால் உண்மையிலேயே அந்த தீர்ப்பு இஸ்லாத்தினுடைய தீர்ப்பு கிடையாது; மாறாக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தீர்ப்பாக இருந்தது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தை இயேசு கிறிஸ்து இரத்து செய்யவில்லை; மாறாக அதை தொடர விட்டுள்ளார்கள். ‘ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ’ என்று இயேசு கூறியுள்ளாரே என ஆட்சேபனை செய்யக் கூடியவர் எடுத்து வைத்தால், கேள்வி என்னவென்றால், இப்போதனை அறிவுடைய எந்தவொரு நபரைப் பொறுத்தவரையிலும் செயல்படுத்த தகுந்ததா? என்பதாகும். எந்தவொரு கிறிஸ்தவ ஆணோ, பெண்ணோ அல்லது கிறிஸ்தவ பிரிவோ, ஆட்சியோ இன்று வரையிலும் இந்தப் போதனைப்படி செயல்பட்டதா என்ன? என்பதாகும். சொற்பொழிவு மேடைகளில் ஏறி நின்று அறிவுரை செய்வதற்கு இது சிறந்த போதனையாக இருக்கலாம். ஆனால் செயல் உலகில் இந்தப் போதனைக்கு எந்த உண்மைத்துவமும் கிடையாது.

இஸ்லாம் மிக கடுமையான வழியையோ மிக மென்மையான வழியையோ பின்பற்றாமல் நடுநிலையான போதனையை எடுத்து வைக்கின்றது. அந்தப் போதனை உலகில் உண்மையான அமைதிக்கான அடித்தளத்தை அமைக்கின்றது. அதாவது, ஒவ்வொரு தீங்கிற்குரிய தண்டனையும் அதன் பொருத்தமான சூழ்நிலை மற்றும் அதன் கடுமைக்கேற்ப இருக்க வேண்டும். ஆனால், மன்னித்து விடுவதாலோ அல்லது மென்மை காட்டுவதாலோ சீர்திருத்தம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்றால் பிறகு, மன்னிப்பதோ அல்லது மென்மை காட்டுவதோ சிறந்ததாகும். அவ்வாறான மனிதர் இறைவனிடத்தில் நற்கூலிக்கு தகுதி படைத்தவராக இருக்கிறார். தண்டனை கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலும், பொருத்தமான வரம்பை விட்டு தாண்டக்கூடாது என்றும்,

உடல்களை சிதைக்கக் கூடிய கொடூரமான செயல்களை செய்யக்கூடாது என்றும் இஸ்லாம் வரையறுத்துள்ளது. ஆனால் இதற்கு எதிரில் கிறிஸ்தவ மக்களுடைய நிலை எவ்வாறு உள்ளது என்றால், காட்சிக்கு மட்டுமே உதவக்கூடிய இயேசு கிறிஸ்துவின் போதனை இருந்த போதிலும் எதிரிகளுடன் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்றால், போர்களில் எப்படிப்பட்ட செயல்களை மேற்கொண்டார்கள்; மேற்கொள்கிறார்கள் என்றால் அது உலக வரலாற்றில் திறந்த புத்தகமாக உள்ளது. அதை மீண்டும் இங்கே எடுத்துக் கூற வேண்டிய அவசியம் கிடையாது!

அவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள்!

**இப்பொழுது இன்னொரு போரைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அது ஸீ கரத் (ذی قرد) போர் என்று அழைக்கப்படுகின்றது.** இந்தப் போர் எப்போது நிகழ்ந்தது என்பதைக் குறித்து வரலாற்றாசிரியர்களிடத்திலும், ஹதீஸ் வல்லுனர்களிடத்திலும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஹதீஸ் வல்லுனர்களோ இதை ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகு, கைபர் போருக்கு முன்பு நடைபெற்றதாகக் கருதுகிறார்கள். வரலாற்றாசிரியர்களோ இது லஹ்யான் போருக்கு பிறகு நடந்ததாகக் கருதுகிறார்கள். இமாம் புகாரி மற்றும் இமாம் முஸ்லிம் ஆகியோர் கைபர் போருக்கு மூன்று நாட்களுக்கு முன்பு இந்தப் போர் நடைபெற்றதாக கூறுகிறார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் முஹர்ரம் மாதத்தில் இந்தப் போர் நிகழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தப் போரின் விபரம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் 20 பெண் ஒட்டகங்கள் - அவை பால் கொடுக்கக்கூடிய ஒட்டகங்களாக இருந்தன - அதனுடன் மற்ற ஒட்டகங்களும் மேய்ச்சல் நிலங்களில் மேய்ந்து வந்தன. இடையர் ஒருவர் தினமும் மக்ரிப் நேரத்தில் அவற்றின் பாலை கறந்து பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கொண்டு வந்து கொடுப்பார். ஒருநாள் உயைனா ஃபஸாரீ என்பவர் பனூ ஃகத்ஃபானுடைய 40 குதிரை வீரர்களுடன் அங்கு தாக்குதல் நடத்தி அந்த ஒட்டகங்களை ஓட்டிச் சென்றார். தாக்குதலின்போது அந்த பெண் ஒட்டகங்களை மேய்த்து வந்த ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃப்பாரீ (ரலி) அவர்களின் மகனான ஸர் ஐயும் எதிரிகள் கொன்றுவிட்டார்கள். அத்துடன், ஹஸ்ரத் அபூ ஸர் (ரலி) அவர்களின் மனைவி லைலா அவர்களையும் சிறைப்பிடித்து கொண்டு சென்றார்கள்.

உயைனா ஃபஸாரீ என்பவர் யார் என்றால், அகழ் போரின் போது பனூ ஃபஸாரா கோத்திரத்தின் தலைவராக இருந்தார். அவர் மக்கா வெற்றிக்கு பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்றும், வேறோர் அறிவிப்பின் அடிப்படையில் மக்கா வெற்றிக்கு முன்பு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்றும், ஹுனைன் போரிலும் தாயிஃப் போரிலும் கலந்து கொண்டார் என்றும் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ தமீம் ஐ தண்டிப்பதற்காக 50 வீரர்களுடன் இவரை அனுப்பி வைத்தார்கள். அவர்களுள் எந்தவோர் அன்சார் சஹாபியும், முஹாஜிர் சஹாபியும் இருக்கவில்லை.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் இவர் முர்தத் ஆகிவிட்டார். துலைஹா என்பவன் நபித்துவ வாதம் செய்த போது அவனுடன் இவர் சேர்ந்து கொண்டார்; அவனிடம் பைஅத் செய்தார். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டார்கள். அன்னார் இவர் மீது பேருபகாரம் செய்தவாறு மன்னித்து விட்டார்கள். பிறகு இவர் மீண்டும் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார்.

அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; உயைனாவுடைய தாக்குதலுக்கு முன் ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃப்பாரீ (ரலி) அவர்கள் ஒட்டகங்களின் மேய்ச்சல் பகுதிகளை நோக்கிச் செல்வதற்கு பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். அதற்கு அன்னார், உங்கள் மீது அப்பகுதியில் எதிரிகள் தாக்குதல் நடத்தலாம் என்று உம்மைக் குறித்து எனக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் உயைனா மற்றும் அவருடைய கூட்டாளிகளிடமிருந்து நாம் பாதுகாப்பாக இல்லை. அந்த இடம் அவர்களின் பகுதியில்தான் உள்ளது என்றார்கள். ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃப்பாரீ (ரலி) அவர்கள் வலியுறுத்தி கேட்டபோது, உம்முடைய மகன்

கொல்லப்படலாம் என்றும், உம்முடைய மனைவி சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்படலாம் என்றும், நீர் ஒரு கைத்தடியின் துணையுடன் வருவீர்கள் என்றும் எனக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸர் ஃகஃப்பாரீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் என் விஷயத்தில் அச்சமாக உள்ளது என்று கூறியபிறகும் நான் பிடிவாதம் செய்து கொண்டிருந்ததை நினைத்து எனக்கு வியப்பாக உள்ளது! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் என்ன கூறினார்களோ அவ்வாறுதான் நிகழ்ந்தது. (அந்த தாக்குதல் நிகழ்ந்த போது) நான் வீட்டில் இருந்தேன். அன்னாரின் பெண் ஒட்டகங்கள் தொழுவத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. அவற்றுக்கு நீர் இறைக்கப்பட்டு விட்டன. அதாவது தீவனம் போன்றவை போடப்பட்டு விட்டன. அவற்றின் பால் கறக்கப்பட்டு முடிந்து விட்டது. பிறகு நாங்கள் தூங்கி விட்டோம். இரவு நேரத்தில் உயைனா 40 வீரர்களுடன் வந்து எங்கள் மீது தாக்குதல் நடத்தினார். அவர்கள் கொஞ்சம் நேரம் கழித்து குரல் எழுப்பிய போது என்னுடைய மகன் வெளியே சென்றான். அவனை அவர்கள் கொன்றுவிட்டார்கள்.

**இச்சம்பவத்தில் ஹஸ்ரத் சலமா பின் அக்வஃ அவர்கள் எதிரிகளை விரட்டிச் சென்றதைப் பற்றிய குறிப்பும் காணக்கிடைக்கிறது.** சலமா பின் அக்வஃ அவர்கள் ஒட்டகங்களை ஓட்டிச் சென்றவர்களை விரட்டிச் சென்றார்கள். அவர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே சென்றார்கள். பல ஒட்டகங்களை திரும்பப் பெறுவதில் வெற்றி பெற்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த விவகாரம் பற்றி தெரிய வந்த போது மதீனாவில் அறிவிப்பு செய்யப்பட்டது. அறிவிப்பு செய்யப்பட்டவுடனேயே பெரும் பெரும் சஹாபிகள் ஆஜராகிவிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சஅது பின் ஸைத் (ரலி) அவர்களை அமீராக நியமித்து விரட்டிச் செல்லுமாறு கூறினார்கள். அன்னாரும் 500 அல்லது 700 சஹாபிகளுடன் புறப்பட்டுச் சென்றார்கள். அன்னார் ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) அவர்களின் ஈட்டியில் கொடியைக் கட்டினார்கள்.

**இந்த போர் நடவடிக்கையில் நிகழ்ந்த இன்னொரு சம்பவத்தைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.** இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ அய்யாஷ் (ரலி) அவர்களிடம், அபூ அய்யாஷே! நீங்கள் உங்களை விட சிறந்த வீரருக்கு உங்களுடைய குதிரையைக் கொடுக்க மாட்டீர்களா? அதன் மூலமாக அவர் விரைவாக எதிரியை சென்றடைந்து விடலாம் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூ அய்யாஷ் (ரலி), அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அனைவரையும் விட சிறந்த வீரனாவேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ அய்யாஷ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் இவ்வாறு கூறிவிட்டு என்னுடைய குதிரையை முன்னால் ஒட்டிய போது அது 50 கஜ தூரம்தான் சென்றிருக்கும் அது என்னை நிலத்தில் தள்ளி விட்டது. உம்மை விட சிறந்த சவாரிக்கு குதிரையை கொடுங்கள் என்று அன்னார் இப்பொழுதுதானே கூறினார்கள். நான் அனைவரையும் விட சிறந்த குதிரை வீரன் ஆவேன் என்று கூறி வந்தேனே என்று எனக்கு வியப்பு ஏற்பட்டது.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த குதிரையை ஹஸ்ரத் முஆஸ் பின் மஆஸ் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். இந்தப் போரில் சஹாபிகள் பெரும் வீரத்துடனும், உயிரை தியாகம் செய்தவாறும் போரிட்டார்கள். சில சஹாபிகள் தம் தீரத்தை வெளிப்படுத்தியவாறு ஷஹாதத்தை அடைந்தார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* இந்த போரின் சம்பவங்கள் இன்னும் உள்ளன. இனி வரக்கூடிய காலத்திலும் தொடரும் இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)